# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2019/21 - 2017 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2017.05.19

*2019/21 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபார பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2017, மே மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, மே 19.*


1A - PG 2650 — 532 (2017/05)



இவ் அதிவிசேட வர்த்தமானியை *www.documents.gov.lk* எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபார பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச். எஸ். தலைப்பு* | *எச். எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| 01 | 07.03 | 0703.10.10 | சிறிய வெங்காயங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25 |
| 02 | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 60 |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள் - சாறு இல்லாத காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 60 |
| 03 | 08.06 | 0806.20 | திராட்சைப் பழங்கள் - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 230 |
| 04 | 09.09 | 0909.31 | நற்சீரகம் - நசுக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 162 |
| | | 0909.32 | நற்சீரகம் - நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 162 |
| 05 | | 0909.61.20 | பெருஞ்சீரகம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 162 |
| 06 | 10.06 | 1006.20 | உமி அகற்றிய அரிசி (தவிடு நீக்காத) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 5 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.